# அரசின் பொருளாதாரக் கொள்கையில் ஊழல்


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 9 இதழ் 71
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-4-1994


## ஸ்ரீ. ல. சு. க. சாடல்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசின் பொருளாதாரக் கொள்கை ஆட்சியிலுள்ளவர்களின் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு கொள்கையாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதிகள் தம்மைச் சந்தித்த உலக வங்கியின் தென்

(4-ம் பக்கம் பார்க்க)

### காரைநகர் படையினரின்

## ஷெல் தாக்குதலில்

### பெண் தலைசிதறிப் பலி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் இராணுவமுகாமிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின்போது ஒருபெண் தலை சிதறிப் பலியானார். பல வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது பொன்னாலை கடற்பரப்பில் இருந்த

(4-ம் பக்கம் பார்க்க)

# பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தால்

# வடக்கு - கிழக்குப் பிரச்னைக்கு

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

## சிறிமா உலக வங்கி இயக்குனரிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படும். இதுவே எமது கட்சியின் கொள்கையாகும். எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

உலக வங்கியின் தென்கிழக்காசிய பிராந்தியத்தின் இயக்குநர் போல் ஐசன்டன் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே திருமதி பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் தென் மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றபோதுதென்பது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணி எவ்வாறு விளக்கி கூறியது என உலகவங்கி இயக்குனர் திருமதி பண்டாரநாயக்காவிடம் வினவினார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்தபோதே வடக்கு—கிழக்குப் பிரச்னை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்படும் என்றும் இது கட்சியின் கொள்கை என்றும் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

### வரவுசெலவு திட்டத்தில்

## துண்டுவிழும் தொகை பற்றி

## உலக வங்கி கவலை

(கொழும்பு)

இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை பெருமளவு அதிகரித்துள்ளதாக உலகவங்கியின்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவை தொகை

## 20ஆக குறைக்கப்படும்

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் தற்போதுள்ள 81 பேரைக் கொண்ட அமைச்சரவை 20 ஆகக்குறைக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

### கடற்றொழிலாளர்க்கான

## நிவாரணத்தை மீண்டும்

## வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்பகுதி மீனவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்குமாறு கோரி யாழ். அரச அதிபர் கா. பாணிக்கவாசகர் அரசுக்கு அவசர செய்தி ஒன்றை நேற்று அனுப்பினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## உலக வங்கி இயக்குனர் - ஸ்ரீ.ல.சு.க. சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள உலக வங்கியின் கிழக்காசிய பிராந்திய பிரிவின் இயக்குனர் போல் ஐசன்டன் நேற்று எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

நாடாளுமன்றம் கட்டிடத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரெருப்பர்க

(4-ம் பக்கம் பார்க்க)

### பிக்குமார் யாழ். விஜயம் :

## அரசின் தடை விதிப்பு

## நாடு பிரிவதற்கு ஒப்பாகும்!

(கொழும்பு)

பிக்குமாரின் யாழ். விஜயத்துக்கு அரசு தடைவிதித்தால் அது நாட்டைப் பிரித்துக் கொடுத்ததாகவே இருக்கும்.

இவ்வாறு யாழ். நகருக்கு பிக்குமாரை அனுப்பி வைப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வரும்சர்வமத ஒன்றியத்தின் செயலாளர் வண. டாக்டர் றியன்ஸி

(4-ம் பக்கம் பார்க்க)

## சுவிஸ் அரசு இலங்கை தமிழ் அகதிகளை

## திருப்பி அனுப்புவதாக மீண்டும் அறிவிப்பு!

### மனித உரிமை அமைப்புகள் கண்டனம்!!

(லண்டன்)

சுவிட்சர்லாந்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இவ் வருடக் கடைசிப் பகுதியிலிருந்து கட்டம் கட்டமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப் போவதாக சுவிஸ் அரசு நேற்று மீண்டும் அறிவித்தது.

இலங்கையில் மனித உரிமை மீறல் செயல்கள் தற்போது

4 ம் பக்கம் பார்க்க)

### இன்று விசேட படகு சேவை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு — பூநகரி படகு சேவை இன்று வெள்ளிக்கிழமை விசேடமாக நடைபெறுமெனவும் நாளை சனிக்கிழமை வழமைபோலசேவை நடைபெறுமெனவும் விடுதலைப்புலிகள் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். -இ

## வட-கிழக்கு நெருக்கடிக்கு

## தீர்வுகாண அரசுதவறிவிட்டது

### - தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தவறிவிட்டதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகால நீடிப்பு பிரேரணை பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு சிப்பாய்கள்

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

வெற்றிலைக்கேணி முன்னணி

(4-ம் பக்கம் பார்க்க)

